**Press Note No.115 .**

**நாள்–8.10.2010**

**அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா வரும் சனவரி 14 தமிழ்ப்புத்தாண்டு அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்படும்**
**துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தகவல்**

* * * * * *

**அடையாறில் அமைக்கப்பட்டுவரும் சுற்றுச்சூழல் பூங்காவில் இன்று (8.10.2010) காலை 6 மணி முதல் 8 மணி வரை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். ஆய்விற்கு பின் துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :–**

**சென்னையில் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தை உணர்ந்து அடையாறு ஓடை மற்றும் முகத்துவாரத்தை மறுசீரமைக்கவும், 358 ஏக்கர் பரப்பில் அடையாறு பூங்கா என்ற சுற்றுச் சூழல் பூங்கா ஒன்றை ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டு அதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தினை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மே 2008 ல் தொடங்கிவைத்தார். தற்போது இப்பூங்காவில் நில மேம்பாட்டுப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பாறைகளை அடுக்குதல், கருங்கல்லால் ஆன இருக்கைகள் அமைத்தல், வழித்தடங்கள் அமைத்தல் போன்ற பணிகள் 80 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளன. இப்பூங்காவில் நீர் வழிகளை கடக்க மூன்று மரப்பாலங்களும், ஒரு இரும்புப்பாலமும் அமைக்கப்பட்டுள்ளது. பசுமை வேலி அமைக்கும் பணியும், 80 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது. நாற்றங்கால் கட்டிடம், சுற்றுச்சூழல் பற்றிய கல்வி மையம், பார்வையாளர் அரங்கம் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் குறுஞ்செடிகள் நடப்படவுள்ளன. இப்பணி வருகின்ற நவம்பர் 2010 க்குள் முடிவடையும், அதேபோல் சூரிய சக்தியில் இருந்து ஒளிரும் விளக்குகள் அமைக்கும் பணிகளும் விரைவில் முடிவடையும். இப்பூங்கா நகரின் புனரமைப்பு பணிகளின் முக்கியத்துவத்தையும், இயற்கை வளங்களை பாதுகாப்பது எப்படி என்பதையும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தெரிந்துக் கொள்ளக் கூடிய இடமாக அமையும். எதிர்காலத்தில் பூமியை பாதுகாக்க இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகவும் இப்பூங்கா பயன்படும். இப்பூங்கா பணிகள் திட்டமிட்டபடி முடிக்கப்பட்டு 2011 சனவரி 14 தமிழ்ப்புத்தாண்டு அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்படும்.**

**இவ்வாறு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.**

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9